Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 45

செவ்வாய்க்கிழமை 10 ஜனவரி 2023

மார்கழி 26 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

# தமிழ் அரசின் தனிவழியால் எழுகிறது பெரும் கூட்டணி!!

- ★ விக்னேஸ்வரன் தலைமையில் ஒன்றிணைய முடிவு
- ★ மணிவண்ணன் நேற்று இணைவு
- ★ ரெலோ நேற்றிரவு பேச்சு

**யாழ்ப்பாணம், ஜனவரி 10**

**தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியாகச் செயற்படவேண்டும் என்ற தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் விக்னேஸ்வரன் தலைமையில் மிகப் பெரிய கூட்டணி மலரவுள்ளதாகத் தெரியவருகின்றது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனி வழியில் செல்வதால், புளொட் மற்றும் ரெலோவும் இந்தக் கூட்டணியில் பங்கேற்கும் என்று அறியமுடிகின்றது.**

»11

## தமிழ்க் கட்சிகளே ஒன்றிணையுங்கள்

### முன்னாள் போராளி உண்ணாவிரதம்

முல்லைத்தீவு, ஜன. 10

தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைவை வலியுறுத்தி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் முன்னாள் போராளி ஒருவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

வேலுப்பிள்ளை மாதவ மேயர் என்ற முன்னாள் போராளியே, புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் வீதியோரத்தில் தமிழ்த் தேசியத்தின் நிரந்தர தீர்வுக்காக தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கட்சிகள் அமைப்புகள் தனி மனிதர்கள் அனைவரும் ஒன்றுபட வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டத்தை அவர் நேற்று ஆரம்பித்துள்ளார். (அ-ஓ-இ)

## வடக்கின் புதிய ஆளுநர் நியமனம் இந்த வாரம்?

யாழ்ப்பாணம், ஜன. 10

வடக்கு மாகாண ஆளுநராக மலையகத்தைச் சேர்ந்த வர்த்தகரான ராஜ கோபால் நியமிக்கப்படவுள்ளதாக கொழும்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. நாளை மறுதினம் வியாழக்கிழமை இந்த நிய

»11

## மேயர் வேட்பாளராக மீண்டும் ஆனோல்ட்?

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு எதிர்வரும் 19ஆம் திகதி இடம்பெறவுள்ள மேயர் தெரிவில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முன்னாள் மேயர் இ.ஆனோல்டை மீளவும் களமிறக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

»11

## அரசமைப்பிலுள்ள அதிகாரப் பரவலாக்கங்கள் 7 நாள்களுக்குள் நடைமுறையாகவேண்டும்

- தவறினால் அரசாங்கத்துடனான பேச்சு நிறுத்தம்
- காணி விடுவிப்பிலும் 'சுத்துமாத்தை' அனுமதிக்கமுடியாது
- அரசியல் தீர்வுக்கு தயாரா ? 31ஆம் திகதி வரை காலக்கெடு

### அரசாங்கத்துடனான இன்றைய பேச்சில் இவற்றைத் தெரிவிக்க தமிழ்க் கட்சிகள் முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 10

அரசமைப்பின் ஊடாகவும், சட்டங்களின் ஏற்பாடுகளாகவும் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாதுள்ள அதிகாரப் பரவலாக்க விடயங்கள் அனைத்தையும் 7 நாள்களுக்குள் உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் அரசாங்கத்துடனான பேச்சிலிருந்து வெளியேறுவோம் என தமிழ்த் தேசியக் கட்சிகள் இன்றைய சர்வகட்சிக் கூட்டத்தில் தெரிவிக்கவுள்ளன.

»11

## மின்கட்டண அதிகரிப்பு; அமைச்சரவை ஒப்புதல்

கொழும்பு, ஜன. 10

மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு நேற்று அனுமதி கிடைத்துள்ளது.

பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியளவில் மீள் பரிசீலனை செய்யும் அடிப்படையில் இந்த அனுமதி அமைச்சரவையால் வழங்கப்பட்டுள்ளது.

மீள் பரிசீலனையின் போது மீண்டும் மின் கட்டணம் குறைவடைவதற்கான சாத்தியம் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதனிடையே, மின் கட்டண

»11

## பப்ஜி விளையாட்டு; பறிபோனது உயிர்

### பிள்ளைகள் முன்பாக அண்ணனை குத்திக் கொலை செய்தார் தம்பி

கிளிநொச்சி, ஜன. 10

வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் தனது அண்ணனை கத்தியால் குத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் சகோதரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

»11

## தேர்தலை ஒத்திவைப்பதென்றால் ஏன் கட்டுப்பணம் செலுத்துகிறோம்?

### இப்படிக் கேட்கிறார் ஆளும் கட்சி அமைச்சரான பந்துலகுணவர்த்தன



கொழும்பு, ஜன. 10

தேர்தலைப் பிற்போடுவதற்கு நாம் முயற்சிக்கவில்லை. அவ்வாறு முயற்சித்தால் எதற்காக முன்கூட்டியே கட்டுப்பணம் செலுத்தவேண்டும்? குட்டித் தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திவிடமுடியாது - இவ்வாறு அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

»11

### தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை:

## மறந்துபோன தமிழ்க் கட்சிகள்; மறக்காத புலனாய்வாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற உலகத் தமிழராய்ச்சி மாநாட்டின்போது படுகொலை செய்யப்பட்டவர்களது நினைவு நாள் இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது. எனினும் அவர்களை நினைவுகூரும் வகையில் யாழ். முற்றவெளிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி

»11



noolaham.org | aavanaham.org

# தேர்தலைத் தடுப்பதற்கு ஜனாதிபதி சதித்திட்டம்!

## அநுரகுமார பரபரப்புக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 10

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தவிடாமல் தடுப்பதற்காக ஜனாதிபதி பல்வேறுபட்ட சதித்திட்டங்களைத் தீட்டி வருகின்றார். தேர்தலுக்கானவேட்புமனுக்கள் கோரப்பட்டுள்ள நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான அவர், தேர்தல்கள் திணைக்களத்தின் உறுப்பினர்களைச் சந்தித்தமைகூட அத்தகையதொரு நடவடிக்கையே - இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான அனுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.



மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தாம் தயார் என்பதை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வேட்புமனுத் தாக்கல் திகதியூடாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இருப்பினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட அவர் தலைமையிலான பொதுஜன பெரமுன அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தொடர்ந்து பிற்போட பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த வாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து பேச்சில் ஈடுபட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர். தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் திகதி அறிவிக்கப்பட்டு, தேர்தலுக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் நிலையில் ஓர் அரசியல் கட்சியின் தலைவர் சுயாதீன ஆணைக்குழுவின் உறுப்பினர்களை எவ்வாறு சந்திக்க முடியும். அந்தப் பேச்சில் தேர்தலை நடத்த வேண்டாம் என்ற மறைமுக அழுத்தம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி என்ற ரீதியில் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை அழைத்தேன் என ஜனாதிபதி குறிப்பிட முடியாது. ஏனெனில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி அல்லர். 134 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதி. இந்த நாடாளுமன்றத்துக்கு மக்களாணை கிடையாது. ஆகவே, நாடாளுமன்றத்தின் தீர்மானங்களை நாட்டு மக்கள் மதிக்கப் போவதில்லை.

அரசமைப்பின் பிரகாரம், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உரிய தினத்தில் நடத்தப்பட வேண்டும். சட்டத்தின் பிரகாரம், தேர்தலை பிற்போடும் எந்த வழியும் ஜனாதிபதிக்கும் அவர் தலைமையிலான அரசாங்கத்துக்கும் கிடையாது. ஆகவே, மக்களாணைக்கு முரணாக பலவந்தமான முறையில் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள முயற்சித்தால் அது பெரும் விளைவுகளை ஏற்படுத்தும். தேர்தலை பிற்போட அரசாங்கம் எடுக்கும் சகல முயற்சிகளையும் தோற்கடிப்போம்.

உள்ளூராட்சித் தேர்தல் தீர்மானமிக்கது. இந்த உள்ளூராட்சித் தேர்தல் தேசிய அரசியல் சித்தாந்தத்தை தீர்மானிக்கும். பாரம்பரியமான அரசியல் மற்றும் பொருளாதார முறைமை பலவீனமானது என்பதை நாட்டு மக்கள் அனுபவ ரீதியில் விளங்கிக்கொண்டுள்ளார்கள். ஆகவே, உள்ளூராட்சித் தேர்தல் நாட்டுக்கு தீர்மானமிக்கதாக அமையும் - என்றார். (ம)

## உள்ளூராட்சித் தேர்தல்: தீர்க்கமான சந்திப்பு கொழும்பில் நாளை

கொழும்பு, ஜன. 10

தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகள் இடையே நாளை சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது. தேர்தல் சட்டங்கள், தேர்தல் இடம்பெறும் விதம் மற்றும் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

இதனிடையே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக எதிர்வரும் சில தினங்களுக்குள் நீதிமன்ற நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்பாடுகளையும் செல்லுபடியற்றதாக்குமாறு ரீட் கட்டளையை பிறப்பிக்குமாறுகோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் இடையீட்டு மனுதாரராக கண்காணிப்பு அமைப்பு முன்னிலையாகவுள்ளதாக தெரியவருகின்றது. (ம)

## கொழும்பு மேயர் வேட்பாளராக முஜிபுர் ரஹ்மான் களமிறக்கம்

### ஐக்கிய மக்கள் சக்தி வியூகம்

கொழும்பு, ஜன. 10



ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகிவிட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிக்கின்றது.

கொழும்பு மாநகர சபையை ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றும் நோக்கில் மேயர் வேட்பாளராக அவரைக் களமிறக்குவதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது. தெற்கு ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. (ம-22)

## அமைச்சுகளின் வாகனம்; விரைவில் விசாரணைகள்

கொழும்பு, ஜன. 10

அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் பயன்படுத்தும் வாகனங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாக கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பதிவு செய்யப்பட்டதற்கு இணங்க வாகனங்கள் அரச நிறுவனங்களின் வசமுள்ளனவா? அல்லது குறித்த வாகனங்கள் உரிய வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பது குறித்து பரிசீலிக்கப்படவுள்ளதாகவும் கணக்காய்வாளர் தெரிவித்துள்ளார். (ம)

## உள்ளூராட்சிசபைத் தேர்தல் 4 மாதங்களுக்கு ஒத்திவைப்பு?

கொழும்பு, ஜன. 10

எதிர்வரும் மார்ச் முதல் வாரத்தில் உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்திருந்த நிலையில், பல காரணங்களை முன்வைத்து உள்ளூராட்சிசபைத் தேர்தலை நான்கு மாதங்களுக்கு அதாவது, ஜூலை மாதம் வரை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலுக்கு நிதியை வழங்குவதில் இருக்கின்ற சிக்கல், மாவட்ட செயலர்கள் 7 பேர் ஓய்வு மற்றும் இடமாற்றம் பெற்றமை, நெல் கொள்வனவுக்காகப் பணம் ஒதுக்குதல் உள்ளிட்ட பல காரணங்களை அடிப்படையாக வைத்தே தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு ஆலோசித்து வருகின்றது என்று அரச உயர்மட்டம் தெரிவிக்கின்றது.

இதே சந்தேகத்தை எதிர்க்கட்சிகளும் தெரிவிக்கின்றன. ஆனால், காரணம் மேற்கூறப்பட்டவை அல்ல. தோல்விப் பயம் காரணமாகவே தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று அவை கூறுகின்றன. (ம-22)

## தேர்தலில் இருந்து ஒதுங்கும் பெரமுனவின் உறுப்பினர்கள்!

கொழும்பு, ஜன. 10

பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சிசபை உறுப்பினர்களில் அதிகமானவர்கள் இந்தத் தடவை தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று முடிவெடுத்துள்ளனர். சுமார் 20 வீதமான உறுப்பினர்கள் தேர்தலில் இருந்து ஒதுங்குகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமை தொடர்பில் அதிருப்தி அடைந்தே அவர்கள் இவ்வாறு ஒதுங்குகின்றார்கள் என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-22)

## தேர்தலில் போட்டியிட பெரமுன இருநிலையில்

கொழும்பு, ஜன. 10

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன தனித்துப் போட்டியிடுவதா இல்லை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதா என்பது பற்றி அந்தக் கட்சிக்குள் இரண்டு நிலைப்பாடுகள் நிலவுகின்றன.

பஸில் ராஜபக்ச உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் தனித்துப் போட்டியிடும் நிலைப்பாட்டில் உள்ளனர். வேறு சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தே போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச, கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களைப் பல தடவைகள் சந்தித்து களநிலவரம் பற்றி ஆராய்ந்தார். அதன்போது அதிகமானவர்கள் தனித்துப் போட்டியிட வேண்டும் என்றே கூறினார்கள். கிராம மட்டத்தில் ஐ.தே.க. வுக்கு செல்வாக்கு இல்லை என்றும் அவர்களுடன் சேர்ந்து போட்டியிட்டால் தோல்வியடைந்து விடுவோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்தே தனித்துப் போட்டியிடுதல் என்ற நிலைப்பாட்டைப் பஸில் எடுத்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

எனினும் இது தொடர்பில் இரண்டு கட்சிகளும் பேசி இறுதி முடிவு எட்டப்படும் என்று பெரமுன வட்டாரம் தெரிவிக்கின்றது. (ம-14,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுகாதார ஊழியர்கள் நேற்றுக் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10
வாழ்க்கைச் செலவுப் படியை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கவன வீர்ப்புப் போராட்டமொன்று நேற்றுத் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது. சிறிலங்கா ஜனரய சுகாதார சேவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.போதனா மருத்துவமனையில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'வாழ்க்கைச் செலவு படியை அதிகரித்தல்', 'வங்கிகளில் அதிகரித்த வட்டியை நிறுத்துதல்', 'முறையற்ற நியமனத்தை நிறுத்துதல்' உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-14-20)

# டக்ளஸின் செயற்பாடுகளால் சிறு மீனவர்கள் பாதிப்பு!

## கடலட்டைப்பண்ணை அனுமதிக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், ஜன. 10
கடலட்டைப் பண்ணைக்கு எதிராக கிராஞ்சியில் 100 நாள்களுக்கு மேலாக மக்கள் போராடி வரும் நிலையில், போராட்ட இடத்துக்கு முன்னால்வைத்து 83 மீனவர்களுக்கு கடலட்டைப் பண்ணைக்கு அனுமதி வழங்கியமை கண்டிக்கத்தக்கது என்று தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடகிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாஸ் தெரிவித்தார்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்க வடகிழக்கு ஒருங்கிணைப்புக் குழு கிராஞ்சி கடலட்டைப் பண்ணைகள் தொடர்பான விடயம் பற்றி ஊடக வியலாளர் சந்திப்பொன்றை யாழ். ஊடக அமையத்தில் நடத்தியிருந்தனர். அதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே இணைப்பாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடபகுதியில் தற்போதுள்ள முக்கியமான பிரச்சினை கடலட்டைப் பண்ணை உருவாக்கம்.

குறிப்பாக கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் தான்தோன்றித்தனமாக உருவாக்கப்படுவதால் மீனவர்களின் தொழில் மற்றும் தொழில்சார் விடயங்கள் பாதிப்படைகின்றன. கிராஞ்சியில் 100 நாள்களுக்கு மேலாக மக்கள் போராடிவரும் நிலையில் போராட்ட இடத்துக்கு முன்னாலே 83 மீனவர்களுக்கு கடலட்டைப் பண்ணைக்கு அனுமதி வழங்கியமை கண்டிக்கத்தக்கது. அதிலும் அரசாங்கத்தின் முக்கியமான அமைச்சராக இருப்பவர் இவ்வாறு செயற்படுவது வெறுப்புக்குரியதாகும்.

பூநகரி பிரதேச செயலர் எவ்வித கடலட்டைப் பண்ணைக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை எனக் கூறிய போதும், அமைச்சர் எவ்வாறு அனுமதி வழங்கினார் என்ற விடயம் கேள்விக்குரியது. இவ்வாறான செயற்பாடுகளால் கரையோரத்தில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் தொழிலைச் செய்ய ஆழ்கடலுக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.

அமைச்சுப் பதவிக்கு வந்ததும் இந்திய மீனவர் பிரச்சினை, சட்டவிரோத மீன்பிடிக்கு தீர்வு எனக் கூறிய அமைச்சர் தற்சமயம் சிறு மீனவர்களுக்கு பாதிப்பேற்படுத்தும் விடயத்துக்கு ஆதரவு அளிப்பது வேண்டத்தகாத விடயமாகும்.

இலங்கையிலும் சட்டவிரோத மீன்பிடி அதிகரித்து வருகின்றது.

இவ்வாறு தீர்க்கப்படாத மக்கள் சார் பெரும் பிரச்சினைகள் காணப்படும் நிலையில் அரசாங்கத்தில் பொறுப்புள்ள அமைச்சராக அங்கம் வகித்துக்கொண்டு மக்களின் நலனில் அக்கறையின்றி தொடர்ந்தும் செயற்பட்டு வருவது கண்டிக்கத்தக்க விடயமாகும் - என்றார். (ம-14-27)

# டெங்கைக் கட்டுப்படுத்த விழிப்புணர்வு நடவடிக்கை

## வவுனியாவில் முன்னெடுப்பு

வவுனியா, ஜன. 10
வவுனியா பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் அனுசரணையுடன் உக்குளாங்குளம் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில், டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் விதமாக மக்களுக்கான விசேட விழிப்புணர்வு நடவடிக்கை உக்குளாங்குளம் பொது மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

உக்குளாங்குளம் கிராமத்தில் 3 டெங்குநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து டெங்கு அபாயம் குறித்தும், பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குறித்தும் மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வீடுகள், காணிகள், வீதிகள், பொது இடங்கள் போன்றவற்றில் சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினர், பொலிஸார் ஆகியோர் இணைந்து சோதனையிட்டு அவற்றின் தன்மை குறித்து 'ஸ்ரிக்கர்' ஒட்டப்பட்டதுடன் அவற்றைத் தொடர்ந்தும் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், டெங்கு பரவக்கூடிய இடங்களை அகற்றுவது தொடர்பான ஆலோசனைகளும் சுகாதாரப் பரிசோதகர்களால் வழங்கப்பட்டன. (ம-14-18)

உள்ளூராட்சி சபை தேர்தல்

## விண்ணப்பங்கள் கோரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி

யாழ்ப்பாணம், ஜன.10
எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட விரும்புவோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று அந்தக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

தேர்தலில் போட்டியிட விரும்பும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் கட்சியின் மாவட்டக் கிளை அல்லது தொகுதிக் கிளையிடம் இருந்து உரிய விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கட்சியின் யாழ். மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

விண்ணப்பப் படிவங்களைப் பெறுவோர் அதை முறைப்படி பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும் என்றும் யாழ்ப்பாணம் மாவட்டக் கிளை அறிவுறுத்தியுள்ளது. (எ-இ)

ஐந்தாம் ஆண்டு நினைவலைகளில்...!
10.01.2023
பேராசிரியர் கலாநிதி ஜோன் மனோகரன் கென்னடி விஜயரத்தினம்
(முன்னாள் விரிவுரையாளர் – ஆங்கில இலக்கியம், தென்கிழக்கு, கிழக்குப் பல்கலைக்கழகம், பேராசிரியர் – எதியோப்பியப் பல்கலைக்கழகம், எதியோப்பியா)



கென்னடி, எதிர்பார்ப்புக்கள் பல
அறிவுப் புலமை, ஆற்றல் மிக்க சிந்தனை
நாட்டுப்பற்று, இலட்சிய நோக்கு
மண்ணில் மலர வழி சமைத்தாய்!
இடையூறுகள் பல தாண்டி,
விடை காண முற்படுகையில்
அத்தனையும் கேள்விக்குறி.

பயணம் தடைப்பட்டது ஏன்?
விதி வலிது என்பதா? இல்லை
உடற்பூந்துகள் மண்ணில்
மீண்டும் மலரும்
சென்று வா மகனே!
காத்திருப்போம்.........
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

"சண்முகனின் வாசம்",
நீலிப்பந்தனை, காரைநகர்.
(CS/22753)
குடும்பத்தினர், நண்பர்கள்,
உறவினர்கள், ஆசிரியர்கள்,
புலம்பெயர் வாழ் நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
11 • 02 • 1950



உதிர்வு
10 • 01 • 2022

## திருமதி நந்தினி துரைசிங்கம்

**ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் ஆறமுடியவில்லை எம்மால்!**
**இன்றும் உங்கள் பிரிவால் எம் இதயம் கலங்குகின்றது**
**எம் குடும்ப குலவிளக்கு அணைந்ததை எண்ணி மெழுகாய் உருகுகின்றோம்**
**உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.**

ஓராண்டு தினத்தை முன்னிட்டு கடந்த 30.12.2022 அன்று கனடா கந்தசாமி கோவிலிலும், 31.12.2022 நீர்வேலி வாய்க்காற்தரவை பிள்ளையார் கோவிலிலும் நடைபெற்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கணவர் - கந்தையா துரைசிங்கம்**
**மகன் - ரமணன் துரைசிங்கம்**
**சகோதரர்கள் - சகுந்தலாதேவி காசிநாதன், நடராஜா சண்முகதேவன், மாலினி மகேந்திரன், சாந்தினி சிவசாந்திகுமார்,**
**பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CR/38986)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இனப்பிரச்சினை குறுகியதல்ல!

'இனப்பிரச்சினை தொடர்பில் வடக்கு – கிழக்குக் கட்சிகளுடன் மட்டும் பேச்சு நடத்திக் கொண்டிருக்கக்கூடாது. அதற்கப்பால் சிந்தித்து, மலையகக் கட்சிகளுடனும் தனித்துப் பேச்சு நடத்தவேண்டும். இல்லாவிட்டால் இந்த விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் சர்வகட்சி மாநாட்டின் அடுத்தடுத்த பேச்சுக்களைப் புறக்கணிப்போம்' என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன். மலையக மக்களின் நீண்டகால அரசியல் பிரதிநிதியாக – ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக – மூத்த அரசியல்வாதியாக – யதார்த்த சிந்தனைப்பாங்கு உள்ளவரா மனோ கணேசன் வெளியிட்டிருக்கும் இந்தக் கருத்தும் அதன் பின்னரான அதிருப்தி நிலையும் மறுப்பின்றி ஏற்கப்படவேண்டியன.

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை என்பது தனியே வடக்கு – கிழக்கு தமிழர்களுக்கு மட்டுமானதல்ல. இனத்துவேச நடவடிக்கைகளாலும் 70 ஆண்டுகால அடக்குமுறைகளாலும் பேரழிவைச் சந்தித்த இனமாகத் தமிழினம் அடையாளப்படுத்தப்படுகின்றபோதிலும், இனப்பிரச்சினையை தமிழர்களுக்கு மட்டுமானதாக ஆக்கிவிடுதல் தகாது. மலையகத் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும்கூட இந்த நாட்டில் பிரச்சினைகள் இருக்கவே செய்கின்றன. ஆதலால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று வருகின்றபோது அந்தத் தீர்வுக்கான பேச்சு முன்னெடுப்புக்களுக்குரிய எல்லைகளாக வடக்கு – கிழக்கை மட்டுமே நிர்ணயித்துவிடுதலும் அபத்தமே. மனோ வெளியிட்டுள்ள கருத்தின் சாராம்சமும் இதுதான்.

இலங்கைத் தீவானது ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த சிறுபான்மை இனத்தவர்களுக்கும் சபிக்கப்பட்ட தேசம்தான். மலையகத் தமிழர்களின் உழைப்பையும் – குருதியையும் பெருந்தோட்டக் கம்பனிகள் என்னும் அட்டைகள் நீண்டகாலமாகவே உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன. நாளுக்கு ஆயிரம் ரூபா ஊதியம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை தோட்டத் தொழிலாளிகளால் முன்வைக்கப்படுகின்றபோதிலும் அந்தக் கோரிக்கைகளுக்கான வெகுமதி கிடைத்ததாக இல்லை. 'ஆயிரம் ரூபா ஊதியத்தை வழங்குமாறு பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு 'சட்ட உத்தரவுகள்' வழங்கப்பட்ட பின்னரும்கூட, அந்த உத்தரவுகளில் உள்ள வலுவற்ற தன்மையை ஆதாயமாகக் கொண்டு தொழிலாளர்களின் குருதி தொடர்ந்தும் உறிஞ்சப்படுகின்றது. நீண்டுசெல்லும் இந்தத் துயர்கதைக்கான ஒரு 'பரஸ்பர முற்றுப்புள்ளி' கண்ணுக்கெட்டிய தொலைவில் புலப்படவில்லை. குறைந்தபட்சம் அதற்குரிய சாத்தியக்கூறுகளேனும் இல்லை.

இத்தனைக்கும் இலங்கையின் 'பொருளாதாரப் பிரமிட்டின்' முக்கியமான படிநிலையில் இருப்பது மலையகத் தொழிலாளர்களே. இவ்வாறாக, குறை வருவாய், நிறை பசி, கொலனி வாழ்க்கை, சராசரிக் கல்விநிலை என்று பல தசாப்தகாலமாக வதைபட்டுக் கொண்டிருக்கும் மலையக மக்களின் பிரச்சினைகளும் ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு இணைந்தாற்போன்றதான முக்கியத்துவம் வழங்கப்பட்டு பேசப்படவேண்டும். அவர்களின் துன்பியல்களுக்கும் நிரந்தரமானதும் – பரஸ்பரம் ஏற்கக்கூடியதுமான முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் முஸ்லிம் மக்களிடம் தேவையற்றதானதும் அச்சமூட்டும் வகையிலானதுமான (வடக்கு – கிழக்கு இணைப்பு என்றவாறான) கருத்துக்கள் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று நாடாளுமன்றத்தில் அதிருப்தி தெரிவித்த ஹக்கீமின் கருத்துக்களும் இங்கே ஆய்ந்து நோக்கப்படவேண்டியன. தமிழர்களுக்கான இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற பேச்சாடல்களின் போது சில விடயங்கள் முஸ்லிம்களை அசௌகரியப்படுத்தவே செய்யும். தமிழர், முஸ்லிம்கள் என்ற இரண்டு தரப்பும் சிறுபான்மையினராக இருந்தாலும் அவர்களின் சிந்தனைத் தளமும் பிரச்சினைகளும் வெவ்வேறானவை. ஆதலால், ஒன்றுக்கொன்று முரண்படாத வகையிலும், இருட்டடிப்புச்செய்யப்படாத வகையிலும் பேச்சுக்கள் வியாபிப்பதுடன் இந்தப் பேச்சுக்கள் அனைவருக்கானதாகவும் முன்னெடுக்கப்படவேண்டும். அதுவே பெருக்கெடுத்த குருதிச் சகதிக்கான பரிகாரமாக அமைவதுடன், இனி அவ்வாறான இழிநிலையொன்று ஏற்படாமல் இருக்கவும் வழிசெய்யும். ஆனால், சர்வதேசத்தை ஏமாற்றுகின்ற இந்த சர்வகட்சிப் பேச்சுக்களில் இதெல்லாம் இம்மியும் சாத்தியமற்றதே.

## நாளொரு நல்வார்த்தை

"பிறர் குறையைக் காண்பவன் அரை மனிதன், தன் குறையைக் காண்பவன் முழு மனிதன்"
–சோக்ரடீஸ்




# போதைக் கலாசாரத்தை உடன் கட்டுப்படுத்துக!

## கிளிநொச்சியில் போராட்டம்

கிளிநொச்சி, ஜன. 10

"உயிர்கொல்லி போதைப்பொருளற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்" என்ற தொனிப்பொருளில், போதைக் கலாசாரத்தை உடன் கட்டுப்பபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தி, கிளிநொச்சி பாரதி மகா வித்தியாலய பழைய மாணவர்களால் கவனவீர்ப்புப் போராட்டமும் பேரணியும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.



சூசைப்பிள்ளை சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி, பாரதிபுரம் மத்திய வீதி ஊடாக பாடசாலையை வந்தடைந்து நிறைவுற்றது. அண்மைக்காலமாக உயிர்கொல்லி போதைப்பொருள் இளைஞர், யுவதிகள் உள்ளிட்டோரைக் கடந்து மாணவர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது. பல மாணவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகி சீரழிந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று புனர்வாழ்வு மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த நிலையிலே போதைப்பொருளற்ற கலாசாரத்தை உருவாக்குமாறு வலியுறுத்தி மாணவர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(ம-14,113)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் மாத்தளை மாவட்டத்தில் கவனவீர்ப்பு!

கொழும்பு, ஜன. 10

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் மாத்தளை மாவட்டத்தில் கவனவீர்ப்புப் போராட்டமொன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

காணாமலாக்கப்பட்டோர் உறவினர்கள் மாத்தளை நகரப்பகுதியில் முற்பகல் 10 மணிக்கு தமது உறவுகளுக்கு நீதி கோரி துண்டுப்பிரசுரம் விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதனைத்தொடர்ந்து கவனவீர்ப்பை முன்னெடுத்தனர்.

இதன்போது மாத்தளை மாவட்டத்தில் 1989ஆம் ஆண்டு முதல் 1991ஆம் ஆண்டு வரை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 42 என அறிக்கையிடப்பட்டது. ஆனால், 136 வழக்குகளே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன. இதர வழக்குகள் ஏன் விசாரணை செய்யப்படவில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

(ம-14)

## நாளை

11.01.2023
புதன்கிழமை
மார்கழி 27

| | |
|---|---|
| சுபநேரம் | : 05.03 - 06.33 |
| ராகுகாலம் | : 12.33 - 02.03 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் பிரதேசசபையால் விவசாயிகளுக்கு இலவச உரம்!



யாழ்ப்பாணம், ஜன. 10

மானிப்பாய் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட 400 பயனாளிகளுக்கு மானிப்பாய் பிரதேசசபையால் இலவசமாக இயற்கை உரம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட 15 பயனாளிகளுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மலசலகூடத்திட்டத்தை வழங்குவதற்கு கடிதங்களும் கையளிக்கப்பட்டன.

மானிப்பாய் பிரதேசசபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், பிரதேசசபையின் உறுப்பினர்கள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-14-27)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வருடாந்த திருவாசக விழா சந்நிதியான் ஆச்சிரமத்தில் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ய-66)

## பேசாலையில் மூவியரசர் விழா



மன்னார், ஜன.10

மன்னார் மறைமாவட்டத்தில் மூவியரசர் பட்டினம் என அழைக்கப்படும் பேசாலையில் மூவியரசர் விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

விழாவின் ஒரு பகுதியாக புனித வெற்றி அன்னையின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெற்றது. வெற்றி அன்னையின் திருச்சொரூபம் கடல்நீரால் கழுவப்பட்டு அந்த நீர் கடலுடன் மீண்டும் கலக்கப்பட்டது. அத்துடன், குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இருப்பவர்களுக்காக குழந்தை இயேசுவின் சிறப்பாசீரும் வழங்கப்பட்டது. (ய-60)



கொடிகாமம் கச்சாய் மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றிய கா.குணசிங்கத்தின் மணிவிழா நிகழ்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ய-159)

## திருவாசகம் முற்றோதல்: 13 பேருக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10

இலங்கை முதலுதவிச் சங்கம் இந்து சமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில், திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயிலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

மேற்குறித்த சங்கத்தின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், இலங்கை முதல் உதவி சங்க இந்து சமயத் தொண்டர் சபையில் இணைந்து சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்ட 13 பேர் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ய-66)





சாவகச்சேரி கல்வயல் வெற்றிலை வியாபாரி சின்னையா இரத்தினத்தின் நினைவாக கல்வயல் சிறீசண்முகானந்தா வித்தியாலயத்தில் கற்கும் மாணவர்களுக்கு அவரது குடும்பத்தினரால் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ய-9)

கிளிநொச்சி பூநகரி பிரதேசசபையின் நிதி ஒதுக்கீட்டில் பொருளாதாரம் நலிவடைந்த தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. பள்ளிக்குடா அ.த.க. பாடசாலை, பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம், செம்பன் குன்று அ.த.க. பாடசாலை, செல்லையா தீவு அ.த.க. பாடசாலை, பூநகரி நல்லூர் ம.வித்தியாலயம், சாமிப்புலம் அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுக்கே கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. (ச-13)



சாவகச்சேரி வடக்கு ஞானவீரபத்திரர் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை திருவாகச முற்றோதல் நிகழ்வு இடம்பெற்றது. (ச-9)



ஊர்காவற்றுறை பிரதேசசபையின் அனலைதீவு பொதுநூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. (ச-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாட்டில் 1981ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தின் பின்னர் பூட்டப்பட்டிருந்த, காங்கேசன்துறை இலங்கை வங்கியின் காரியாலயம் நவீனதொழில்நுட்ப வசதிகளுடன் நேற்று திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.
குறித்த வங்கிக் கிளை திறப்பு நிகழ்வில் இலங்கை வங்கியின் வட பிராந்திய முகாமையாளர், யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி, தெல்லிப்பழை பிரதேசசெயலர், வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர், பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் இலங்கை வங்கியின் வங்கி முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ய-27)

## செபஸ்ரியார்புரம் வீதி தற்காலிக புனரமைப்பு

கிளிநொச்சி, ஜன. 10
முழங்காவில் வட்டாரத்துக்குட்பட்ட செபஸ்ரியார்புரம் வீதியில் தற்காலிக புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
250 குடும்பங்கள் பயன்படுத்தும் வீதியானது நீண்டகாலமாக குண்டும்குழியுமாகக் காணப்பட்டது. அந்த வீதியால் போக்குவரத்து மேற்கொள்ளும் பலர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். இந்த நிலையிலேயே பூநகரி பிரதேசசபையால் தற்காலிக புனரமைப்புப் பணிகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டன. (ம-14-13)



## பொங்கலை முன்னிட்டு அங்காடி வியாபாரம்

சாவகச்சேரி, ஜன. 10
தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு அங்காடி வியாபாரம் மேற்கொள்ள சாவகச்சேரி நகரசபை அனுமதி வழங்கியுள்ளது.
சாவகச்சேரி ரயில் நிலைய வீதியில் பண்டிகைக் கால அங்காடி வியாபாரம் செய்ய வுள்ளோர் நகரசபையுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார். (ம-14-9)

### கடந்த வருடத்தில் மட்டும்

# யாழ்ப்பாணம் போதனாவில் 260,000 பேருக்குச் சிகிச்சை!

யாழ்ப்பாணம், ஜன. 10
யாழ்ப்பாணம் போதனா மருதத்துவமனையில் கடந்த ஆண்டில் மட்டும் இரண்டு லட்சத்து அறுபதாயிரத்து 428 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று மருத்துவமனையின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

மருத்துவமனையின் விடுதியில் ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 948 பேர் தங்கி சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர். அதனைவிட மருத்துவமனையின் வெளி நோயாளர் பிரிவில் மட்டும் ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 480 பேர் வரையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

## வடக்கு எஸ்.டி.ஐ.ஜியாக பதிவியேற்றார் மஹிந்த குணரத்ண



வடமாகாண சிரேஸ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபராக மஹிந்தகுணரத்ண, காங்கேசன்துறையில் உள்ள காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.
வடக்கு மாகாணத்தில் குற்றச் செயல்களைத் தடுக்கவும், போதைப்பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என்றும் அவர் தெரிவித்தார். (ம-14-26)

## கொடுப்பனவு வழங்கல்

சாவகச்சேரி, ஜன. 10
தென்மராட்சிப் பிரதேச பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கான ஜனவரி மாதக் கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றன.
கொடுப்பனவுப் பட்டியல் பிரதேச சமூக சேவைகள் அலகால் அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து நேற்று திங்கட்கிழமை தொடக்கம் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. (ம-14-9)

## யாழ்ப்பாணப் பெட்டகத்தால் ஆக்கத்திறன் போட்டிகள்!

யாழ்ப்பாணம், ஜன. 10
உலக பண்பாட்டுத் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பெட்டகத்தால் 'யாழ்தாரகை' விருதுக்கான கலை ஆக்கத்திறன் வெளிப்பாட்டுப் போட்டிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
அதற்கமைய பேச்சு, கையெழுத்துச் சஞ்சிகை, சிறுவர்களுக்கான கதை சொல்லல், நாடகப் பிரதியாக்கம், சிறுகதையாக்கம், ஓவியம், ஓராள் அரங்கு, தனிப்பாடல், தனிநடனம், மேடை நாடகம் (திறந்த போட்டி) கவிதை எழுதுதல், அறிவிப்பாளர் ஆகிய போட்டிகளே இவ்வாறு முன்னெடுக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## வடக்கில் இன்றும் சீரான காலநிலை!

கொழும்பு, ஜன. 10
வடமாகாணத்தில் இன்று சீரான காலநிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.
அந்தத் திணைக்களத்தின் ஊடக அறிக்கையில் உள்ளதாவது:
கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. (ம)



தென்மராட்சி அதிபர் சங்கத்தின் பணிநயப்பு விழா அதிபர் சங்கத்தின் தலைவர் செ.பேரின்பநாதன் தலைமையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்றது. நாவற்குழி மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய சி.பவளகுமாரன், எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய கா.சோதிலிங்கம், கோகிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய க.தேவநேசன், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் கடமையாற்றிய திருமதி ஜெ.சிறீபாஸ்கரன் ஆகியோருக்கான பணிநயப்பு விழாவே இடம்பெற்றது. (ய-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி விழாவும் சேவைநலன் பாராட்டும்

யாழ்ப்பாணம், ஜன.10

மணிவிழா மற்றும் சேவை நலன் பாராட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு திருமதி சி.நந்தகுமார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என யாழ். இளையதம்பி இந்து வித்தியாலய பாடசாலை சமூகத்தினர் தெரிவித்தனர்.

மணிவிழா திருமதி ச.சண்முகநாதன் மற்றும் திருமதி கு.உருத்திரகுமாரன் ஆகியோருக்கும், சேவை நலன் பாராட்டு விழா லோ.விமலகாந்தனுக்கும் பாடசாலை அதிபர் திருமதி சி.நந்த குமார் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பேச்சுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

யாழ்., ஜன. 10

பேராசிரியர் கலாநிதி ஜோன் மனோகரன் கென்னடி விஜயரத்தினம் ஞாபகார்த்த பேச்சுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் தி.மதிவதனன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், ஓய்வுநிலை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

(ம-14)


## தேவை

களஞ்சிய காப்பாளர், சாரதிகள், விற்பனை பிரதிநிதி தேவை.

இல.15, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 077 772 2215




## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி தி.ஜானகி அவர்களின் அன்பு மாமனார்

**சபாரத்தினம் திருலோகசிங்கம்**

அவர்கள் கடந்த (06.01.2023) வெள்ளிக்கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்குப் பிரதேசசபையில் கடமையாற்றும் தங்கவேல் கருணாகரன் அவர்களின் அன்புத் தாயார்

**கமலபுஸ்பம் தங்கவேல்**

அவர்கள் கடந்த (07.01.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் **திரு.பாலசுப்பிரமணியம் கரன்** அவர்களின் அன்புத் தந்தை

**வைரமுத்து-பாலசுப்பிரமணியம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிச் சங்கம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(CS 22763)1-6

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 09 . 07 . 1936



இறைவன் அடியில் 09 . 01 . 2023

## தர்மவதி சுப்பிரமணியம்

கொக்குவில் கிழக்கு, நந்தாவிலை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி தர்மவதி சுப்பிரமணியம் நேற்று (09.01.2023) திங்கட்கிழமை கொக்குவிலில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற Major சுப்பிரமணியம் (ஓய்வுநிலை இராணுவ அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், உதயமூர்த்தி மற்றும் சிவபாலகிருஷ்ணன், சிவராஜா (Australia, Former workshop Engineer, Lanka Cement) அவர்களின் அன்புச் சகோதரியும் சுமதி (கனடா), கோகுலன் (ஆசிரியர், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), ராகுலன் (Germany), கௌதமி (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராகவன் (Canada), கிருவாகினி (ஆசிரியர், சாவகச்சேரி), கரோலின்(Germany), பவன் (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஐங்கரன், கத்தரின், பிரணவன், அபிசாயினி, ஜோயல், செலோமி, ஹரி, ஹரிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஒலிவியாவின் அன்பு பூட்டியும், மனோன்மணி, ஜெயராணி, இன்பமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நந்தாவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: கோகுலன்
077 923 9474

தகவல்:
குடும்பத்தினர்.

(cs.48560) (2.6)

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 15 . 03 . 1949



மறைவு 11 . 12 . 2022

கடந்த (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**அமரர் தெய்வேந்திரம் அன்னலெட்சுமி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (10.01.2023) செவ்வாய்க்கிழமை பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**"இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்".**


மேலும் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு உடன் வந்து உதவியோருக்கும், தொலைபேசி, முகநூல் மூலம் வெளிநாடுகளிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.39, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.
077 978 9223

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 11 . 1982



மறைவு 08 . 01 . 2023

## முத்துலிங்கம் சஞ்ஜீவன்

(தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர்)

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் சஞ்ஜீவன் நேற்றுமுன்தினம் (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் சற்குணகுமாரி (குஞ்சு) தம்பதியரின் ஏக புதல்வனும், சுப்பிரமணியம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், அம்பிகாவின் (கமநல சேவை நிலையம் - உரும்பிராய்) அன்புக் கணவரும், கிஷோனனின் பாசமிகு தந்தையும், கீர்த்திகாவின் அன்புச் சகோதரனும், சிவதீபனின் பாசமிகு மைத்துனரும், ஏரகன், ஓவியா ஆகியோரின் அன்பு மாமனாரும், தேவகுமார் கவிதா, சுப்பிரமணியம் கௌரி, சுப்பிரமணியம் புஷ்பகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் (இல.12, சங்கிலியன் வீதி, நல்லூர்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 077 160 6622
077 297 6436

(cs.48517) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வளமான எதிர்காலத்திற்கு பசுமையான சேமிப்பு

BOC ඉතුරු கணக்கினால் தனிநபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் கிடைக்கும் விசேட நன்மைகள்:

- சூரியப் பலகைகள், உயிரியல் வாயு உற்பத்தியாக்கிகள், e-பைசிக்கிள் கொள்வனவு போன்ற மீள்பாவனை வலுசக்தித் தீர்வுகளை வழங்குவதற்கு நிவாரண வட்டிவீதத்தில் கடன் வசதி.
- சுற்றாடலுக்கு உகந்த சமூகப் பொறுப்பு தொடர்பில் காட்டும் பங்களிப்பைப் பாராட்டும் விசேட சான்றிதழ்.

BOC ඉතුරු பசுமை கணக்கிற்கு உரித்தான நிதியானது நிலைபேறான அபிவிருத்திக் கருத்திட்டங்களில் மட்டுமே முதலீடு செய்யப்படும்.

BOC e-ඉතුරු Green Savings Account

மேலதிக விபரங்கள் அண்மையில் உள்ள இலங்கை வங்கிக் கிளையில் அல்லது 1975 அழைப்பு நிலையத்தில்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

1975 BOC CALL CENTRE www.boc.lk

AA- (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


## பரிசளிப்பு

கொடிகாமம், ஜன. 10

வரணி மத்திய கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வு அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் பிரதான மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தம், சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ம.கோவிந்தராஜன், பேராசிரியர். செ.சிவராஜசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ய-159)

# பயணிகள் மடத்துக்குள் பிளாஸ்ரிக் போத்தல்கள்



அனலைதீவு இறங்குதுறையில் பயணிகள் பயன்பாட்டுக்கென அமைக்கப்பட்ட மடத்தினுள் நீண்டகாலமாக பிளாஸ்ரிக் வெற்றுப் போத்தல்கள் குவிக்கப்பட்டுள்ளன. இதனால் தாம் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று பயணிகள் கவலை தெரிவித்தனர். மீள்சுழற்சிக்கு வழங்குவதற்காக சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் வெற்றுப் போத்தல்கள் படகு மூலம் அனுப்புவதற்காக கொண்டுவரப்பட்டு இறங்குதுறையில் உள்ள மடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-14,9)

# நிர்வாகத் தெரிவு

கிளிநொச்சி அக்கராயன் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது உபதலைவராக மா.உதயகுமார், ஏனைய உறுப்பினர்களாக நா.ஜெயகாந்தன், வே.விஜயரட்ணம், ச.தவரூபன், பா.சசிகரன், ப.கிருஸ்ணவதனி, லோ.நிரோசா, த.சுதாயினி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-13)

## மாணவர்களுக்காக சிறப்பு வழிபாடுகள்

கொடிகாமம், ஜன.10

2023ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு ஆசிவேண்டி விசேட பூசை வழிபாடு சாவகச்சேரி வாரியப்பர் புராதன தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ய-159)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்**: மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்**: அனுகூலமான நாள். சகோதரர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தை வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும்.

**மிதுனம்**: உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கடகம்**: பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணையுடன் அனுசரித்துச் செல்லவும். தாய்மாமன் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்**: புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன்– மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி**: பலவகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். சகோதரர் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**துலாம்**: மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்** : இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும்.

**தனுசு**: சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். நண்பர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கைத் துணைவழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும்.

**மகரம்**: மகிழ்ச்சி தரும் நாள். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கலில் சிரமமான சூழ் நிலை ஏற்படும்.

**கும்பம்**: நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**மீனம்**: எதிலும் பொறுமை அவசியம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும் என்பதால் சற்று சோர்வு உண்டாகும்.

# அணைக்கட்டு திறப்பு விழா

வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தலில் மாந்தை மேற்கின் கூராய் அணைக்கட்டு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, மன்னார் மாவட்டச்செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எ.சிவபாலசுந்தரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-14,13)

# குமார் பொன்னம்பலத்தின் 23 ஆவது நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஜன. 10

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 23ஆவது நினைவேந்தல் நிகழ்வும் நினைவுப் பேருரையும், யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

நிகழ்வில் குமார் பொன்னம்பலத்தின் திருவுருவப்படத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், குமார் பொன்னம்பலத்தின் புதல்வருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மலர் மாலை அணிவித்து ஈகைச் சுடர் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களும் பொதுமக்களும் அவரின் திருவுருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இறுதியாக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறை முன்னாள் தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதன் நினைவுப் பேருரையை ஆற்றினார். (ம-14-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்டன் பண்டிதரின் நினைவுநாள் நேற்று



யாழ்ப்பாணம், ஜன. 10
தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கப்டன் பண்டிதர் என அழைக்கப்படும் சின்னத்துரை ரவீந்திரனின் 38 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ். மாநகர முன்னாள் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்கள் மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டு பண்டிதரின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து, ஈகைச்சுடர் ஏற்றி, அஞ்சலி செலுத்தினர்.

1985 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதியன்று அச்சுவேலியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் தளமொன்றைப் பெருந்தொகையான படையினர் திடீரென முற்றுகையிட்டனர். இதன்போது அங்கிருந்த விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையே கடும் சண்டை மூண்டது. நீண்ட நேரமாக நடைபெற்ற இந்தச் சண்டையில் கப்டன் பண்டிதர் உள்ளிட்ட நான்கு விடுதலைப் புலி உறுப்பினர்கள் வீரச் சாவு அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-66)

# தலைக்கவசம் அணியாதவர் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஜன. 10
தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையிலிருந்து பயணித்தவர், தவறி வீழ்ந்து படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

புலோலி தெற்கைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான ராசு புவனேஸ்வரன் (வயது - 37) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டிலிருந்து வேலைக்கு மோட்டார் சைக்கிளில் இன்னொருவருடன் பயணித்துள்ளார். இவர் தலைக்கவசம் அணியாது பின்னால் இருந்துள்ளார். மந்திகைச் சந்தியில் மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்தபோது இவர் தவறி வீழ்ந்துள்ளார். படுகாயங்களுடன் மந்திகை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார். இந்த நிலையில், நேற்றுக்காலை அவர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

# பிறந்த நாளில் காணாமற்போன இளைஞன் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 10
பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்குச் செல்கின்ற பிரதான வீதியில் பொன்னாலை பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள கிணற்றிலிருந்து இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மூளாய் வேரம் பகுதியைச் சேர்ந்த கிருஸ்ணமோகன் கிருசாந்தன் (வயது -21) என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த இளைஞர் கடந்த 5 மாதங்களாக பொன்னாலையில் உள்ள சித்தப்பா வீட்டில் வசித்து வந்துள்ளார். அவரது 21ஆவது பிறந்ததினம் நேற்றுமுன்தினமாகும். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவிலிருந்து அவர் காணாமற்போயுள்ளார்.

அவரை உறவினர்கள் தேடி வந்த நிலையில், கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். காலணி மற்றும் துவிச்சக்கர வண்டி என்பன கிணற்றுக்கு வெளியே காணப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் நீண்ட காலமாக உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி சிகிச்சை பெற்று வந்தாரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ-ஒ-27-125)

## ஆளுநர்கள் நியமனம் இழுபறியில் ரணில் மீது பெரமுன அதிருப்தி

கொழும்பு, ஜன. 10
ஒன்பது மாகாணங்களுக்கான ஆளுநர்கள் நியமனம் மேலும் தாமதமாகின்றன. இதனால் பெரமுன கட்சியினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது கடும் அதிருப்தியில் உள்ளனர் என்று அறியமுடிகின்றது.

மாகாணங்களுக்கான ஆளுநர்கள் நியமன விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் சில மாதங்களுக்கு முன் ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

பெரமுனக் கட்சி சார்பில் ஐந்து ஆளுநர்களும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் நான்கு ஆளுநர்களை நியமித்தல் என்பதே அந்த இணக்கப்பாடு. ஆனால், ஜனாதிபதி எந்தவித காரணமும் இன்றி அந்த நியமனங்களை இழுத்தடிக்கின்றார் என்று பெரமுன எம்.பிக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஏற்கனவே, அமைச்சரவை நியமனம் கூட கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனால் பெரமுன எம்.பிக்கள் ஜனாதிபதி ரணில் மீது கடும் அதிருப்தியில் உள்ளனர் என்று பெரமுனக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-14,22)


காரைநகர்
**கிழவன்காடு கலாமன்றம்** நடாத்தும்
**சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின்**
**176ஆவது இசை ஆராதனை விழா**
**அழைப்பு**
இடம் : கிழவன்காடு கலாமன்றம்
மனோன்மணி கலையரங்கு,
காரைநகர்.
காலம்: 11.01.2023 புதன்கிழமை. பி.ப 4.00 மணி
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**
கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் - யாழ்கிளை.
(CR 39002) 1-6


## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 01 . 1972



மறைவு 08 . 01 . 2023

### திருநாவுக்கரசு கஜேந்திரன்
**(சின்னக்கஜன்)**

சங்கரத்தை வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட திருநாவுக்கரசு கஜேந்திரன் (சின்னக்கஜன்) கடந்த (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு நேசமலர் தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், ஜெயந்தா (கனடா), சுரேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிறிதரன் (கனடா), கிரிஜா, ஜனந்திரன் ஆகியோரின் மைத்துனரும், தயாளினியின் ஒன்றுவிட்ட சகோதரனும், வைஸ்ணவி, அட்சஜா, சஜீவன், சாதுகா ஆகியோரின் மாமாவும், பங்கஜன், லக்மிதன், தஸ்வின் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2023) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

T.P:077 0366 190

தகவல்:
தி.சுரேந்திரன் (சகோதரர்)
ஸ்ரீமுருகன் வெதுப்பகம், சங்கரத்தை.
(CR 39001) 1/6

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 . 02 . 1947



மறைவு 16 . 12 . 2008

### அமரர் நல்லையா தவகுலசிங்கம் (தவம்)
(முன்னாள் சீமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர், காங்கேசன்துறை
தவம் அக்ரோ இயந்திரவியல் தொழிலகம் – கோண்டாவில், மல்லாகம்)

தவம் இருந்து பெற்றெடுத்த – தவப்புதல்வனே!
தன் தொழிலில் தன்னலமற்ற சேவைபுரிந்து
தனக்கென ஓர் இடம் பிடித்து
தரணி போற்ற வாழ்ந்த எம் – அன்புத் தந்தையே!
ஆண்டுகள் பதின்னான்கு சென்றாலும்
ஆறாது உங்கள் நினைவுகள்.

மல்லாகம். (CS/48561) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலை...

உள்ளாட்சிமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள சபைகளுக்கு போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை கொழும்பு மாவட்டச் செயலகத்தில் சிறிலங்கா பொதுஜன பெரமுன நேற்று செலுத்தியது.

அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில், மொட்டுக் கட்சி செயலர் சாகர காரியவசத்தின் பங்கேற்புடன் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இதன்போது ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சாகர் காரியவசம், எமது கட்சியை பசில் ராஜபக்ச வெற்றிகரமாக வழிநடத்துகின்றார். தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயார். அதில் வெற்றியும் நிச்சயம். மக்கள் மனங்களில் மொட்டுக் கட்சியே உள்ளது' - என்றார். (அ-ஒ-44)

## தமிழ்...

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள மூன்று கட்சிகளும் தனித்தனியே எதிர்கொள்வது என்று இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் மத்தியகுழு தன்னிச்சையாக முடிவு செய்தது. அந்த முடிவை பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் புளொட் என்பன ஏற்கவில்லை. இது தொடர்பில் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று கூறப்பட்டது.

நேற்று மாலை இது தொடர்பில் ஆராய முற்பட்டபோதும் சம்பந்தனின் உடல் நலக் குறைவால் இன்றைய தினத்துக்கு அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து பிரிந்து செயற்படும் யாழ். மாநகர முன்னாள் மேயர் வி.மணிவண்ணன் தரப்பினர், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதனையடுத்து இரண்டு தரப்பும் இணைந்து உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வதென முடிவானது.

'நானும் மணிவண்ணன் தரப்பினரும் தேர்தல் ரீதியாக ஒருமித்துப் பயணிக்கலாமா என்பது தொடர்பில் சில முடிவுகளுக்கு வந்திருக்கின்றோம். நாங்கள் இணைந்து எதிர்வரும் தேர்தலைச் சந்திக்க உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். மணிவண்ணன் அல்லது கஜேந்திரகுமாரின் கட்சிகளின் கொள்கைகளிலும், எங்கள் கட்சியின் கொள்கைகளிலும் அதிக வித்தியாசங்கள் இல்லை. ஆனால், நடைமுறையில் எவ்வாறான தீர்மானங்களை எடுக்கவேண்டும் என்பதில் அவர்களுடைய சிந்தனைக்கும், எங்கள் சிந்தனைக்கும் பலவிதமான வித்தியாசங்கள் காணப்படுகின்றன' என்று இந்த இணைவு தொடர்பான சந்திப்பில் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

'நாங்களும், விக்னேஸ்வரன் ஐயாவின் கட்சியும் இணைந்து எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வது என கொள்கையளவில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கிறது. யாழ். மாநகரசபையின் வரவு - செலவுத் திட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தோற்கடித்துள்ள நிலையில் இந்தக் கள யதார்த்தங்களையும் ஆராய்ந்தே நாங்கள் இந்த இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம்' என்று மணிவண்ணன் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பு இடம்பெற்று முடிந்த சில மணி நேரங்களில் ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி, விக்னேஸ்வரனைச் சந்தித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவது என்பதில் உறுதியாக இருக்கின்றமையால், அந்த முடிவுடன் உடன்படாத ரெலோ மற்றும் புளொட் ஆகிய, தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தையும் உள்ளடக்கிய பரந்துபட்ட கூட்டமைப்பை விக்னேஸ்வரன் தலைமையில் உருவாக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

விக்னேஸ்வரனின் கூட்டணியில், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசியக் கட்சி என்பன அங்கம் வகிக்கும் நிலையில் ரெலோ மற்றும் புளொட் ஆகிய அந்தக் கூட்டணியில் இணைவதன் ஊடாக புதிய பெரும் கூட்டணி மலரவுள்ளதாக அரசியல்வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (அ-ஒ-5-66)

## அரசமைப்பிலுள்ள...

அரசாங்கத்துடனான இன்றைய சர்வ கட்சி பேச்சுக்களில் தமிழ்த் தேசியக் கட்சிகள் எவ்வாறான நிலைப்பாடுகளை எடுப்பது என்பது தொடர்பில் நேற்று மாலை, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் கூடிப் பேச்சு நடத்தின.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ரெலோ சார்பில் கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், புளொட் சார்பில் கட்சித் தலைவர் த.சித்தார்த்தன் மற்றும் இராகவன், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் பங்கேற்றனர்.

காணி விடுவிப்புத் தொடர்பில் அரசாங்கத்துடனான சந்திப்பில் ஏற்கனவே அழுத்தமாகத் தெரிவிக்கப்பட்டபோதும் இதுவரை எந்தவொரு காணிகளும் விடுவிக்கப்படவில்லை. அவை விடுவிக்கப்படுவதற்கான ஏதுநிலைகளும் தெரியவில்லை. அதற்கு மாறாக புதிது புதிதாகக் காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகளே நடைபெறுகின்றன. ஆயுதப் படைகளுக்காக இருக்கட்டும், ஏனைய திணைக்களங்களுக்கானதாக இருக்கலாம் எந்தவொரு காணி சுவீகரிப்பும் நடைபெறாமல் இருப்பதற்கான உத்தரவு உடனடியாகப் பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அதையே செய்ய முடியாவிட்டால் பேச்சுக்களைத் தொடர்வதில் அர்த்தமில்லை என்பதை அரசாங்கத்துக்கு தெரியப்படுத்த வேண்டும்.

அரசமைப்பின் ஊடாகவும், சட்டங்களின் ஏற்பாடுகளாகவும் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாதுள்ள அதிகாரப் பரவலாக்க விடயங்கள் அனைத்தையும் 7 நாள்களுக்குள் உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும். இதனை ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் ஊடாக எந்தவொரு தாமதமும் தடங்கலும் இன்றிச் செய்ய முடியும் என்பதால் ஒரு வார கால அவகாசம் போதுமானது என்று அரசாங்கத்துக்கு கூறவேண்டும். தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் தயாரா என்பதையும், எந்த அடிப்படையில் அந்தத் தீர்வை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்போகின்றார்கள் என்பதையும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை அரசாங்கம் உதாசீனம் செய்யுமாக இருந்தால் தொடர்ந்தும் பேச்சுக்களில் பங்கேற்கப் போவதில்லை என்பதையும் இன்றைய கூட்டத்தில் அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தவேண்டும் என்று நேற்று முடிவெடுக்கப்பட்டது. (அ-ஒ-5)

## வடக்கின்...

மனம் வழங்கப்படவுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

மலையகத்தைச் சேர்ந்த ராஜகோபால், பெரும் வர்த்தகர். இவர் இந்தியாவின் உயர்மட்ட அரசியல் தலைவர்களுக்கு நெருக்கமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## மேயர்...

இதேவேளை - மணிவண்ணன் தரப்புக்கு, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆதரவளிக்கவுள்ளதாகத் தெரியவரும் நிலையில், மீண்டும் மாநகர மேயராக மணிவண்ணன் தெரிவாவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

யாழ். மாநகரசபை மேயராக இருந்த மணிவண்ணன் தனது வரவு - செலவுத் திட்டம் ஒரு தடவை தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பதவி விலகியிருந்தார். மீளவும் மேயர் தெரிவு இடம்பெறாது என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் முன்னர் தெரிவித்திருந்தாலும், சட்ட ஆலோசனைக்கு அமைவாக மீளவும் மேயர் தெரிவை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தலை கடந்த 6ஆம் திகதி அவர் வெளியிட்டிருந்தார்.

இதற்கு அமைவாக எதிர்வரும் 19ஆம் திகதி மேயர் தெரிவு நடைபெறவுள்ளது. இதன்போது கூட்டமைப்பு சார்பில், முன்னர் மேயராக இருந்து வரவு - செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டமை காரணமாக பதவியிழந்த இ.ஆனோல்டை மீளவும் களமிறக்க ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மணிவண்ணன் தரப்பு நேற்றைய தினம் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியுடன் பேச்சு நடத்தியது. அவர்களுடன் இணைந்து எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொள்ளவுள்ளது. அந்தக் கூட்டணியில் ரெலோவும், புளொட்டும் இணையும் என்றும் எதிர்பார்க்கப்படும் சூழலில், அந்தக் கூட்டணியில் உள்ள அனைவரும் 19ஆம் திகதி இடம்பெறும் மேயர் தெரிவில் மணிவண்ணனை ஆதரிக்கவுள்ளனர் என்று அறியமுடிகின்றது. (அ-ஒ-5)

## பப்ஜி...

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் நேற்று மதியம் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

3 பிள்ளைகளின் தந்தையான தருமராசா தவசீலன் (வயது -37) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் வீட்டுக்கு அருகிலுள்ள வீதியில், அண்ணன் - தம்பி இருவரும் நடந்து சென்றுள்ளனர். தம்பியின் கைத்தொலைபேசியைப் பயன்படுத்தி 'பப்ஜி' விளையாட்டில் அண்ணன் ஈடுபட்டுள்ளார். இதன்போது, கைத்தொலைபேசிக்கு இப்போதுதான் மீள் நிரப்பு அட்டையூடாக 'டேட்டா' (இணைய பாவனைக்கான) போட்டதாகவும் அதனை விளையாடியே முடிப்பதாகவும் அண்ணனுடன் தம்பி முரண்பட்டுள்ளார். இதனையடுத்து இவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அது ஒரு கட்டத்தில் கைகலப்பாகியுள்ளது. திடீரென தம்பி, அண்ணனைக் கத்தியால் நெஞ்சில் குத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதனையடுத்து அவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

'சகோதரர்களுக்கு இடையிலான தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இந்தக் கொலை நடைபெற்றுள்ளது. கொலைச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணைகள் நடைபெற்று வருகின்றன' என்று கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சமுத்திர ஜீவ, 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார். (அ-ஒ-125-213-113)

## மின்கட்டண...

அதிகரிப்புத் தொடர்பான யோசனை நேற்று மாலை கிடைக்கப்பெற்றதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## மறந்துபோன...

நேற்று இரவு வரையில் எந்தவொரு தமிழ்க் கட்சிகளாலும் துப்புரவு செய்யப்படவில்லை. ஆனால், புலனாய்வாளர்கள் அந்தப் பகுதியில் நேற்றுக் காலையிலிருந்து மாலை வரையில் காத்திருந்தனர். கடந்த காலங்களில் நினைவேந்தலுக்கு முதல் நாள் அந்தப் பகுதி துப்புரவு செய்யப்படுவது வழமை. ஆனால் இம்முறை எவருமே அதனை எட்டியும் பார்க்கவில்லை.

இதேவேளை இன்றைய தினம் இடம்பெறவுள்ள நினைவேந்தலுக்கான அழைப்பை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் விடுத்துள்ளார். இன்று முற்பகல் 10 மணிக்கு நினைவேந்தல் நடைபெறும் என்று அறிவித்துள்ளார்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான அரசு, பொலிஸாரை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்தியது. இதன்போதே தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். (அ-ஒ-17-20)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

ஆரோக்கியமான பெண்மணி ஒருவரைப் பார்ப்பதற்கு உதவி யாளர் தேவை.

தொடர்பு :- 077 276 5413

## வீட்டுப்பணிப்பெண் தேவை

யாழ்.நகருக்கு அண்மையில் தங்கி நின்று வீட்டு வேலை செய்வதற்கு உகந்த நல்லொழுக்கமுள்ள பணிப்பெண் தேவை.

தொடர்பு: 076 287 8157

## அறை வாடகைக்கு

மருதனார்மடம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்பாக அறை வாடகைக்கு உண்டு. மாணவிகள், ஆசிரியர்கள் விரும்பத்தக்கது.

தொ.பே :- 077 957 4580

(CS/48528)

## உழவர் அரிசிக்கடை

உழவர் - ஆட்டக்காரி அரிசி

1Kg - Rs. 250.00/=

25Kg Bag Rs.6200.00/=

65Kg Bag Rs. 16125.00/=

மருதனார்மடம் சந்தை

076 287 8655

(cs/22756)

## யாழ்.மாவட்டத்தில் உள்ள கடையில் வேலை வெற்றிடம்

விற்பனையாளர்

(Salesmen / Sales Girls) தேவை.

தகுதி:- G.C.E. O/L அல்லது A/L, Internet, Computer MS

வயது:- 18 - 35

076 287 8157

(CS/22757)

## காப்பாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள தங்கும் விடுதிக்கு 02 காப்பாளர்கள் தேவை.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்.

077 394 5982, 021 224 2136

(cs 48559) (2.6)



## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 11 . 1937



மறைவு 07 . 01 . 2023

### திரு. பொன்னையா இலங்கநாதபிள்ளை (இராசதுரை)

(ஓய்வுபெற்ற குடியேற்றத்திட்ட அதிகாரி – மன்னார்)

யாழ். இணுவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில், நெட்டிலிப்பாயை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இலங்கநாதபிள்ளை அவர்கள் கடந்த (07.01.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னையா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கனகலச்சுமி (நிவேதராணி) அவர்களின் அன்புக் கணவரும், வாசவன் (பிரித்தானியா), உமாக்காந்தன் (பிரித்தானியா), சந்திரகாந்தி (இலங்கை), சிவகாந்தன் (பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுஷியா, சுமித்திரா, சசிதரன், அபிராமி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியங்கா, பிரகாஷ், தர்சனா, அருஷன், ஷாருணி, ஷருண், சகிஸ்னு, அஜிஸ்னு, ஆராதனா, சுருதிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகி, சுவாமிநாதபிள்ளை, இராமநாதபிள்ளை, இராஜேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் பார்வைக்கு Wednesday, 11 Jan 2023 3:00 PM - 7:00 PM Jayaratne Funeral Directors (Pvt) Ltd Elvitigala Mawatha, Colombo 00700, Sri Lanka .கிரியை Thursday, 12 Jan 2023 9:00 AM Home 105 Hampden Ln, Wellawatta, Colombo 00600, Sri Lanka. தகனம் Thursday, 12 Jan 2023 11:45 AM General Cemetery, Mount Lavinia Dehiwala-Mount Lavinia இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு 94777170474

(CS 16575) (3/6)

தகவல் : குடும்பத்தினர்.


பொற்பதியில்

# புலிகளின் ஆயுதங்களை தேடிய வேட்டை தோல்வி



யாழ்ப்பாணம், ஜன. 10

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொக்குவில் பொற்பதிப் பகுதியில் ஜே/126 கிராம அலுவலர் பிரிவில் உள்ள தனியார் காணியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து பாதுகாப்புத் தரப்பினரால் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன. எந்தவொரு ஆயுதங்களோ, சந்தேகத்துக்கிடமான பொருள்களோ மீட்கப்படாமல் அகழ்வு நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

பாவனையற்ற வீட்டுக்காணியில் ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருப்பதாக விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைய நீதிமன்ற அனுமதிபெற்று அகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது. காணியின் நான்கு பகுதிகளில் ஐந்து அடி ஆழமாக குழிகள் தோண்டப்பட்டன. இருப்பினும் எதுவிதமான ஆயுதங்களோ அல்லது சந்தேகத்துக்கு இடமான பொருள்களோ மீட்கப்படாத நிலையில் அகழ்வுப்பணி இடைநிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பல வருடங்களுக்கு முன்னர் மேற்படி காணியிலிருந்து இராணுவத்தினர் ஆயுதங்களை மீட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் காணியில் 1990ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காவலரண் இயங்கியதாகவும் 1998 ஆம் ஆண்டு முதல் ஒரு வருட காலத்துக்கு இராணுவ முகாம் இயங்கியதாகவும் அறியமுடிகிறது.

காணியின் உரிமையாளர் சுவிஸில் வதியும் நிலையில் 2017ஆம் ஆண்டு காணி வேறு ஒரு நபருக்கு விற்கப்பட்டுள்ளது.

கடந்த வருடமும் யாழ்ப்பாணத்தில் காணியொன்றினுள் ஆயுதங்கள் இருப்பதாக அகழ்வுகள் இடம்பெற்று ஏமாற்றமடைந்த பாதுகாப்புத் தரப்பினர் இரண்டாவது தடவையாகவும் இவ்வருட ஆரம்பத்தில் ஆயுதங்கள் சிக்காமலேயே அகழ்வுப் பணியை இடைநிறுத்தியுள்ளனர். (அ-ஒ-125)


## மணப்பெண் தேவை

01. மல்லாகம். இந்து கௌரவகுலம் (V). 1972. உத்திரட்டாதி. Bio Supply Chain Manager, Logistician, Swiss Citizen, செவ்வாய்க்குற்றம் இல்லாத மாப்பிள்ளைக்கு 38 வயதிலிருந்து 42 வயதுவரையுள்ள அழகான பெண் தேவை. O/L வரை படித்துள்ள சீதனம் இல்லாத பெண் போதுமானது. பதிவெண் - 25324

02. அச்சுவேலி - கொடிகாமம். இந்து, கௌரவகுலம் (V). 1971. புனர்பூசம். செவ்வாய்குற்றம் இல்லாத, Accountant, Swiss Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. O/L வரை படித்த பெண் போதுமானது. பதிவெண் - 23372

03. நாரந்தனை - பண்டத்தரிப்பு. Roman Catholic கௌரவகுலம் (V). 1981. MBBS Doctor, Swiss Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 21177

04. யாழ்ப்பாணம். இந்து கௌரவகுலம் (V). 1986. மகம். BSc, France Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 33048

05. சங்கானை, இந்து குருகுலம். 1981. அச்சுவினி. A/L, Clerk, France Citizen மாப்பிள்ளைக்கு பெண்தேவை. பதிவெண் - 29449,

06. காங்கேசன்துறை - கோப்பாய். இந்து, கௌரவகுலம் (V). A/L, Diploma, France Citizen, மாப்பிள்ளைக்கு பெண்தேவை. 8 இல் செவ்வாய் - பதிவெண் - 28781

07. சங்கானை- சுன்னாகம், இந்து, கௌரவகுலம் (K). 1986 ரேவதி. A/L, France Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. செவ்வாய்க்குற்றம் இல்லை. தகப்பன் கௌரவகுலம் (V). பதிவெண் - 28571

08. மூளாய் - பனை. இந்து. கௌரவகுலம் (K). 1983, உத்திரட்டாதி A/L, France Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. செவ்வாய்க்குற்றம் இல்லை. பதிவெண் - 26634

09. கரையூர் - பருத்தித்துறை. இந்து குருகுலம் 1976. ஆயிலியம். A/L, Cook, France Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 26372

10. வவுனியா. இந்து. தகப்பன் கௌரவகுலம் (V). தாய் கௌரவகுலம் (K). 1976. சித்திரை. Business Managment, Business Marketing, France Citizen, அழகான மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 7 இல் செவ்வாய் + சூரியன். பதிவெண் - 11599

தொடர்புகளுக்கு: S.Sarma J.P Astrologer Whatsapp : 077 803 8193

(cs 48547) (2.6)


## தேர்தல் இடைநிறுத்தக் கோரிய மனுவுக்கு எதிராக மனுத்தாக்கல்

கொழும்பு, ஜன. 10

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை இடைநிறுத்துமாறு கோரி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த ... மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது நிராகரிக்குமாறு இரு நகர்த்தல் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

... த மனுக்கள் நேற்று உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

... கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் சட்டத்தரணி சுனில் வட்டகல மற்றும் சமூகச் செயற்பாட்டாளர் ...ங்க குணசேகர ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## 2 1/2 வயதுக் குழந்தை காய்ச்சலால் சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 10

நீண்ட நாள்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த இரண்டரை வயதுக் குழந்தையொன்று நேற்று உயிரிழந்துள்ளது.

மீசாலையைச் சேர்ந்த லவராஜ் ஆர்நிதா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த 5ஆம் திகதி குழந்தைக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து குழந்தையை தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ப்பித்துள்ளனர். 4 நாள்களின் பின்னர் மீண்டும் காய்ச்சல் தொடர்ந்துள்ளது.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குழந்தையைச் சேர்த்துள்ளனர். இந்த நிலையில் குழந்தை நேற்றுக் காலை உயிரிழந்துள்ளது.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)



...த்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org